Indl. copy

(

**தமிழ்நாடு பதிவுத்துறைத்தலைவர் நடவடிக்கைகள், சென்னை 28**
**முன்னிலை: முனைவர்.பொ.சங்கர் இ.ஆ.ப.,**

**எண்:18849/கே2/2020 நாள்:04.03.2021**

2021

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - இளநிலை உதவியாளர்கள் - நேரடி நியமனம் 2018-19 மற்றும் 2019-20ஆம் ஆண்டுகளுக்குரியது - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE தொகுதி IV தேர்வின் மூலம் நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது

பார்வை:
1.தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016.
2.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.2503/PSD-1/2020 நாள்.30.05.2020 (உடன் பெறப்பட்ட பட்டியல்).
3.பதிவுத்துறை தலைவர் ஆணை எண்.18849/கே2/2020 நாள்.30.07.2020 மற்றும் 07.10.2020.
4.மாவட்ட பதிவாளர், ஈரோடு கடித எண்.3936/அ1/2020 நாள்.30.12.2020.
5.மாவட்ட பதிவாளர், காஞ்சிபுரம் கடித எண்.3155/அ1/2020 நாள்.18.01.2021.

****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய குழுவால் CCSE தொகுதி IV (2018-19 மற்றும் 2019-20ஆம் ஆண்டுக்கானது) தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை-2ல் காணும் தேர்வாணையக் கடிதத்தின்படி பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் ஆணைகளின்படி, இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள, கீழ்க்கண்ட இளநிலை உதவியாளர்களின் பணியை பார்வை-(4) மற்றும் 5-ல் காணும் அறிக்கைகளின் அடிப்படையில் இவர்கள் பணியில் சேர்ந்துள்ள நாளான கலம்-5-ல் காணும் நாள் முதல் வரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)ன்படி, இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை நிறைவு செய்ய வேண்டும் என தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணைய பட்டியல் வ.எண் | பெயர் திரு/செல்வி | நியமனம் வழங்கப்பட்ட பதிவு மாவட்டம் / அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் மற்றும் பணிவரன்முறை நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 2 | உ.ஏ.குப்பன் | காஞ்சிபுரம் | 24.12.2020 மு.ப. |
| 2. | 122 | ந.சங்கீதா | ஈரோடு | 30.12.2020 மு.ப. |

2. 2018-2019 மற்றும் 2019-2020 தொகுதி IV நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனுக்களின் விளைவுகளுக்குட்பட்டு இவர்களது பணி வரன்முறை செய்யப்படுகிறது.

3. மேற்கண்ட அட்டவணையின் கலம்-(1) மற்றும் (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்களுக்கும் முதுநிலைக்கும் தொடர்பில்லை. தேர்வாணையத்திடமிருந்து முதுநிலை குறித்து விவரம் பெறப்பட்ட பின்னரே இவர்களின் முதுநிலை நிர்ணயிக்கப்படும்.

4. இவர்கள் இரண்டாண்டுப் பணிக்காலத்தையும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியையும் நிறைவு செய்த பின்னர், தகுதிகாண்பருவம் நிறைவு செய்வதற்கான கருத்துருவை அனுப்பி வைக்கவும், பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டது தொடர்பாக பணிப்பதிவேட்டில் உரிய குறிப்புகள் மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் கோரப்படுகிறார்கள்.

ஒம்./-04.03.2021
பதிவுத்துறை தலைவர்

17/3/2021

/ஆணையின்படி/

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

17/3

பெறுநர்:
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்.
(சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர் மூலம்)

நகல்:
1. மாவட்டப் பதிவாளர், காஞ்சிபுரம்/ஈரோடு.
2. முக்கிய ஆணைக் கோப்பு / தனிநகல்-1.